# ஸலாமா

## Newsletter - 2019

SALAMAH

Issue No. 001 - January 2020


### தலைவரின் செய்தி...

## கைகோர்த்து செயற்படுவோம்



2020ம் ஆண்டு பிறந்திருக்கும் இத்தருணம் இலங்கை வாழ் மக்களாகிய எமக்கு மிக முக்கியமானது. ஏப்ரல் தாக்குதலினால் ஏற்பட்ட வடு இன்னும் காயாத நிலையிலேயே இவ்வருடம் பிறந்திருக்கின்றது. இதற்கிடையில் நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலில் வெற்றி பெற்ற கௌரவ கோத்தாபய ராஜபக்ஷ அவர்கள், நாட்டை அபிவிருத்தியை நோக்கி நகர்த்துவதற்கான பணிகளை முன்னெடுத்து வருகின்றார்.

பத்து அம்சக் கொள்கைகளை முன்வைத்து ஜனாதிபதி அவர்கள் தனது பணிகளை முன்னெடுத்துள்ளார். இவை தேசிய மட்டத்திலும், ஊர் மட்டங்களிலும் நல்ல விளைவுகளை ஏற்படுத்தும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இதன் உண்மையான பயனை நாட்டு மக்கள் அறுவடை செய்ய வேண்டும். அதற்காக மக்களின் ஒத்துழைப்பு அவசியமாகும். இந்நாட்டில் இயங்குகின்ற சிவில், நலன்புரி, சமூக செயற்பாட்டு அமைப்புக்கள் தங்களது பணிகளையும் இதற்கேற்றவாறு அமைத்துக் கொள்ளும் போது விளைவுகளை இன்னும் அதிகமாகக் காணலாம்.

சமூக சீர்திருத்தம், நாட்டை வளப்படுத்தல் என்பது ஒரு தரப்பால் மாத்திரம் மேற்கொள்ள முடியுமான பணியல்ல. அரச இயந்திரத்துடன் இணைந்த வகையில் சிவில் செயற்பாடுகளும் அமைவது முக்கியமானது. நாட்டுப் பிரஜைகள் ஒவ்வொரும் இதன் பங்காளிகளாக மாற வேண்டும்.

ஆக்கபூர்வமான விமர்சனம், நல்ல பணிகளைப் பாராட்டல், அதன் விளைவுகளை அடைவதற்காக ஒத்துழைத்தல் என்பன எமக்கு மத்தியில் வளர வேண்டிய பண்புகளாக உள்ளன. அனைத்தையும் விமர்சித்தல் என்ற நிலையில் இல்லாது தவறுகளை சுட்டிக் காட்டி, ஒன்றாகப் பயணிக்கும் கலாச்சாரம் பலப்பட வேண்டும். அப்போதுதான் நாம் அனைவருமாக ஒன்றிணைந்து இந்நாட்டை வளப்படுத்த முடியும்.

**அஷ்ஷெய்க் ஆஸாத் அப்துல் முஈத்**
தலைவர், ஸலாமா சொஸைடி.

## உள்ளடக்கம்


- தலைவரின் செய்தி ~ கைகோர்த்து செயற்படுவோம்
- ஸலாமா எதை நோக்கி ?
- செயலகத்திலிருந்து...
- ஈஸ்டர் தாக்குதலின் பின் முஸ்லிம் சமூகத்தின் சவால்களும் கடமைகளும்
- ஸலாமா தின நிகழ்வுகள் 2019
- கிறிஸ்தவ அருட்தந்தையுடனான சந்திப்பு
- Salamah Talks நிகழ்ச்சித் தொடர்
- ஸலாமா Dialogue Forum - ஆசிரியர்களுக்கான உரையாடல் மன்றம்
- ஸலாமாவின் வருடாந்த பொதுக்கூட்டம்
- ஸலாமாவின் குடும்ப வழிகாட்டல் நிகழ்ச்சி


## ஸலாமா எதை நோக்கி ?

இஸ்லாமிய விழுமியங்களின் அடிப்படையிலான முஸ்லிம் சமூகத்தை உருவாக்கலும், நீதியும் சமாதானமும் நிலவும் அபிவிருத்தியடைந்த இலங்கைச் சமூகத்தை உருவாக்குதலும், மனித நாகரீகத்தை வளப்படுத்தலுமே ஸலாமாவின் பணியாகும்.

# செயலகத்திலிருந்து...



எல்லாப் புகழும் சர்வ வல்லமை மிக்க அல்லாஹ் ஒருவனுக்கே. நபி (ஸல்) அவர்கள் மீதும் அவர்களது கிளையார்கள் தோழர்கள் மீதும் சாந்தியும் சமாதானமும் உரித்தாகட்டும் என்ற பிரார்த்தனையுடன் தொடர்கிறோம்.

நீண்டதொரு இடைவெளிக்குப் பிறகு வெளிவரும் ஸலாமா செய்திமடல் ஊடாக உங்களை சந்திப்பதில் மகிழ்ச்சியடைகிறோம்.

2019 ஏப்ரல் மாத நிகழ்வு ஸலாமா நிறுவனத்துக்கு மட்டுமல்லாமல் முழு முஸ்லிம் சமூகத்துக்கும் அத்துடன் முழு நாட்டுக்கும் ஒரு பின்னடைவையே கொண்டு வந்தது என்பதில் சந்தேகமில்லை.

எமது பிள்ளை எமது பொறுப்பு என்ற தொனிப்பொருளில் 2019ம் ஆண்டை ஆரம்பித்த நாங்கள் குறித்த தொனிப் பொருள் சார்ந்த பல நிகழ்ச்சிகளை நாடளாவிய ரீதியில் நடாத்துவதற்கு திட்டமிட்டிருந்தோம். என்றாலும் ஏப்ரல் மாதத்துடன் எந்தவிதமான நிகழ்ச்சிகளையும் செய்வதற்கு ஏற்ற சூழல் நாட்டில் எங்குமே காணப்படவில்லை. ஏற்பட்ட அந்த அதிர்வில் இருந்து முஸ்லிம் சமூகம் வெளிவர நீண்ட நாட்கள் எடுத்தன.

பல முயற்சிகளுக்குப் பின் இஸ்லாமிய புது வருடத்தின் முதல் மாதமான முஹர்ரமில் இருந்து மீண்டும் நிகழ்ச்சிகளை நடாத்த ஆரம்பித்தோம். அதன் பின் தொடராக நடந்த நிகழ்ச்சிகளின் போது அவதானிக்க முடிந்த ஒரு விடயம் என்னவென்றால் முன்பு போன்று பொது மக்கள் இவ்வாறான நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டு பயனடைவதற்கான தயார் நிலைக்கு இன்னும் மீளவில்லை என்பதாகும். நிகழ்ச்சிகளில் நேரடியாக கலந்து கொள்வதை விட வீட்டிலிருந்தவாறே முகநூலில் நிகழ்ச்சிகளை பார்ப்பவர்கள் அதிகமாக இருந்தனர். முஸ்லிம் சமூகம் ஏற்பட்ட பீதியிலிருந்து இன்னும் வெளிவரவில்லை என்பதை இதனூடாக உணர முடியுமாக உள்ளது.

என்றாலும் 2020ம் ஆண்டிலும் ஸலாமாவின் செயற்பாடுகளை தங்கு தடையின்றி கொண்டு செல்வதற்காக முயற்சித்து வருகின்றோம். சமூகத்துக்கு வழிகாட்டக்கூடிய பல்வேறு நிகழ்ச்சிகளையும் ஏற்பாடு செய்வதற்கு உத்தேசித்துள்ளோம். அத்துடன் இவ்வாண்டுக்கான எமது தொனிப்பொருளாக மனித நேயம் என்பதை தெரிவு செய்துள்ளோம். குறித்த தொனிப் பொருளின் கீழ் சகோதர சமூகங்களையும் இணைத்தவாரான நிகழ்ச்சிகளை ஒழுங்கு செய்வதில் கவனம் எடுத்துள்ளோம்.

இந்த கஷ்டமான காலத்திலும் எம்முடன் இணைந்து செயற்பட்ட எமது அங்கத்தவர்களை நன்றியுடன் நினைவு கூர்வதற்கு கடமைப்பட்டுள்ளோம். எதிர்வரும் காலத்திலும் உங்களது பூரண ஒத்துழைப்பை எதிர்ப்பார்க்கிறோம். எனவே, ஸலாமா அங்கத்தவர் என்ற வகையில் எப்போதும் போன்று நாட்டு நலன்களையும் கருத்திற் கொண்டு நீங்கள் வாழுகின்ற பிரதேசங்களின் நன்மைக்கு தேவையான அனைத்து முயற்சிகளிலும் அதற்காக பாடுபடுகிறவர்களுடன் இணைந்து பணியாற்றுமாறு தயவுடன் உங்களை வேண்டிக்கொள்கிறோம்.

இறுதியாக, நல்ல பிரஜைகளை உருவாக்குவதிலும், முஸ்லிம் சமூகத்தை சரியான பாதையில் வழிநடாத்துவதிலும், நாட்டு நலனுக்கான செயற்படுவதிலும் ஸலாமா என்றும் முன்னணியில் இருந்து செயற்படும் என்பதை உறுதிப்படுத்துகிறோம்.

அல்லாஹ் எமது நற்பணிகளை பொருந்தி கொள்வானாக. ஆமீன்

**M. F. M. ஃபாஹிம்**
பொதுச் செயலாளர்

# ஈஸ்டர் தாக்குதலின் பின் முஸ்லிம் சமூகத்தின் சவால்களும் கடமைகளும்

ஏப்ரல் 21 தாக்குதலுக்கு பின்னர் முஸ்லிம்கள் மீதும் இஸ்லாமிய அமைப்புக்கள் மீதும் மேற்கொள்ளப்பட்ட பாதுகாப்பு கெடுபிடிகள் நாம் யாவரும் அறிந்ததே. இந்த தாக்குதல் இலங்கை முஸ்லிம்களின் வரலாற்றில் புதிய சோதனைகளுக்கான தோற்றுவாய் என்பதை கட்டியம் கூறுகிறது. திடீர் தாக்குதலாக வெடித்த சோதனை சமூகத்திற்கு பெரும் அதிர்ச்சியை தந்துள்ளது. அந்த அசாதாரண சூழ்நிலையில் முஸ்லிம்கள் பீதியின் உச்ச நிலையில் எதனையும் இழக்கத் தயார் என்பதைக் காட்டும் வெளிப்பாடுகளையே களத்தில் காணக்கூடியதாக இருந்தது.

காரணம் ஏப்ரல் 21 தாக்குதல் சாதாரண ஒன்றல்ல. அதன் அதிர்வுகளும் பின்விளைவுகளும் பாரியது. இந்த தாக்குதல்கள் ஒரு புதிராக இருந்தாலும் சர்வதேச நிகழ்வுகளுடன் தொடர்புபடுத்தி நோக்கும் போது அதன் இலக்குகளை புரிந்து கொள்வது சிரமம் அல்ல.

ஏப்ரல் தாக்குதல் முஸ்லிம் சமூகத்துக்கு சொல்லும் செய்தி நாம் கடந்த காலங்களில் இயங்கியது போல் இயங்க முடியாது என்பதே. இந்த உண்மையை அனைவரும் உணர்ந்தும் உள்ளனர்.

முஸ்லிம் சமூகம் அறிந்தோ அறியாமலோ விட்ட தவறுகளும் குறைபாடுகளும் ஏப்ரல் தாக்குதலின் பின்னர் பல புதிய சவால்களை உருவாக்கியுள்ளன. இதன் பாரதூரங்களை முழு மனதுடன் உள்வாங்கி எதிர் காலத்திற்காக உழைக்க வேண்டிய கண்டிப்பான தேவை உள்ளது.

இன்று விரல்விட்டு எண்ணக்கூடிய சில முஸ்லிம் இளைஞர்களிடம் காணப்படும் தீவிரவாத சிந்தனைகள், ஒட்டுமொத்த சமூக சீர்திருத்த அமைப்புக்களையும் சந்தேகக் கண் கொண்டு பார்க்கும் நிலைக்கு தள்ளியுள்ளது. அவ்வாறே இனவாதம் பரவலான ஒரு சவாலாக உள்ளதுடன் அது அரச இயந்திரத்தினுள்ளும் செல்வாக்குச் செலுத்தியுள்ளது. சகவாழ்வு முயற்சிகளும் சந்தேகக் கண்கொண்டு பார்க்கப்படும் நிலை ஏற்பட்டுள்ளது. தாக்குதலின் விளைவாக பொதுமக்கள் இஸ்லாமிய சீர்திருத்த அமைப்புக்களை விட்டும் விலகிச் செல்லும் அபாயம் ஏற்பட்டுள்ளது. சிங்கள பௌத்தர்கள் முஸ்லிம்களை ஆக்கிரமிப்புக்காரர்களாகப் பார்க்கின்ற அளவுக்கு நிலைமை மோசமடைந்துள்ளது. தற்போது முஸ்லிம் சமூகம் தொடர்பிலும் இஸ்லாம் தொடர்பிலும் பாரிய சந்தேகங்களும் வெறுப்புகளும் ஏற்பட்டுள்ளது. இதன் விளைவாக மார்க்கத்தில் பிடிப்பில்லாத முஸ்லிம்கள் நல்ல முஸ்லிம்களாகவும் மார்க்கத்தில் பிடிப்போடு இருப்பவர்கள் அடிப்படைவாதிகளாகவும் பயங்கரவாதிகளாகவும் பார்க்கப்படும் நிலை உருவாகியுள்ளது. இது ஈஸ்டர் தாக்குதலின் பின்னர் முஸ்லிம் சமூகம் எதிர் நோக்கும் முக்கியமான சில சவால்களாகும்.

இனி நமது பொறுப்பு என்ன என்பது பற்றியே எமது கவனக் குவிப்பு அமைய வேண்டும். இந்த இக்கட்டான அசாதராண சூழ்நிலையில் முஸ்லிம்களின் பொறுப்பு எப்படி இருக்க வேண்டும் என்பதற்கான சில விடங்களை பின்வருமாறு அடையாளப்படுத்தலாம்.

- அல்லாஹ் மீதான நம்பிக்கையில் எக்காரணம் கொண்டும் தளர்வு ஏற்படக் கூடாது. அல்லாஹ் அறியாமல் எதுவும் நடப்பதில்லை. நடந்தவை அனைத்தும் நன்மைக்கே. இறைவன் எங்களுக்கு நன்மையையே நாடுகின்றான். நாம் நடந்தவற்றிலிருந்து பாடம் கற்று முன்னேற வேண்டும்.
- முடியுமான அளவு விட்டுக் கொடுத்து ஒற்றுமையாக கூட்டிணைந்து பரஸ்பரம் உதவி ஒத்தாசையுடன் செயற்படுவதை உறுதி செய்ய வேண்டும்.
- ஊர் மட்டங்களில் சிவில் சமூக அமைப்புக்கள் தமது செயற்பாடுகளை சட்ட ஒழுங்குகளுக்கு ஏற்ப முன்னெடுக்க வேண்டும்.
- சகவாழ்வு இஸ்லாம் கூறும் அடிப்படையான ஒரு வாழ்வு முறை என்பதை ஒவ்வொரு குடிமகனும் ஈமான் கொள்ள வேண்டும்.
- ஐந்து நேரத் தொழுகைகளை உரிய நேரத்திற்கு நிறைவேற்றுவதில் கூடிய கரிசனை எடுக்க வேண்டும்.
- மூடுண்ட, இறுகிய சமூக நிலையிலிருந்து விடுபட்டு நாட்டின் மைய நீரோட்டத்தில் கரைந்து போகாமல் கலந்து வாழ வேண்டும்.
- முஸ்லிம்கள் தம் வாழ்வில் தனிமனிதன், குடும்பம், சமூகம் எனும் அலகுகளில் இஸ்லாத்தை நடைமுறைப்படுத்திக் காண்பிக்கும் வகையில் முன்மாதிரியாக இருக்க வேண்டும்.

எனவே நமக்கு முன்னால் பாரிய பொறுப்பு இருக்கிறது. அதை செய்வதற்கு காலம் போதாது. இப்படி நிலைமை இருக்கும் போது கருத்து முரண்பாடுகளை வைத்து மோதிக் கொள்வதில் அர்த்தமில்லை. எதிர்ப்பு இஸ்லாத்திற்கு எதிரானது. இந்தப் புரிதல் தான் அவசியமானது. இஸ்லாத்தை பாதுகாப்பது எப்படி என்பதை தான் இப்போது நாம் சிந்திக்க வேண்டும். இஸ்லாத்தின் உயிரோட்டத்தை எமது நடத்தையில் காட்டுவதே இன்றைய இலங்கை முஸ்லிம்களின் முதன்மை பணியாகும்.

### ஈஸ்டர் தாக்குதலின் பின்...

எம்மை சுற்றியுள்ள சூழல் அதற்கு சிறந்த ஒரு களமாகும். வீட்டுக்கு வரும் பால்காரன், தபால்காரன், கழிவகற்ற வரும் ஊழியன், தண்ணீர் மற்றும் மின்சாரம் பில் கொண்டுவருபவன், வீட்டு வேலைக்காரன், வீட்டுக்கு வரும் வேலைக்காரன். சேவகன், மருத்துவிச்சி, கிராம நிலதாரி, அயலவர்கள், இவர்களுடன் எமது உறவு எப்படி உள்ளது. அவர்களுடனான எமது தொடர்பு, உபசரிப்பு, உரையாடல், முகமலர்ச்சி, முகமன் கூறுவது, பேச்சு, வாழ்த்து என அவர்களோடு எப்படி பழகுகின்றோம். எமது பழக்கவழக்கம் இஸ்லாத்தின் தூதாக அவனது உள்ளத்தை ஆளும் அல்லவா?

நாங்கள் நபிகளாரின் வாழ்வை வரலாற்றில் ஒரு ஏடாக மாத்திரம் பார்க்கக் கூடாது. இந்த அசாதாரண சூழலில் எமது உறவும் தொடர்பும் தான் பாதுகாப்பு வேலியாக வரும். எமக்கு அல்லாஹ்வின் உதவி தேவை என்றால் நாம் ஒரு சான் முன்னே போகக் கூடாதா!

தாயிப் நகரத்தில் இருந்து வந்த நபிகளாரை காப்பாற்றியது ஒரு முஸ்லிம் அல்ல. உம்மு ஸலமா ரழி அவர்களை மதீனாவிற்கு பாதுகாப்பாக அழைத்துச் சென்றது ஒரு முஸ்லிம் அல்ல. அகபா சந்திப்பின்போது இறைதூதருக்கு மெய்பாதுகாவலராக இருந்தவர் ஒரு முஸ்லிம் அல்ல. ஹிஜ்ரத் பயணத்திற்கு பாதுகாப்பான வழியை காட்டியது ஒரு முஸ்லிம் அல்ல. இஸ்லாத்தை ஏற்கவில்லையே என்பதற்காக மக்காவாசிகளின் உடமைகளை பாதுகாக்கமாட்டேன் என இறைதூதர் மறுக்க வில்லை. அபூதாலிப் கலிமா சொல்லவில்லையே என்பதற்காக நபிகளார் அவரின் பாதுகாப்பை மறுதளிக்கவில்லை. எனவே நல்லுறவு எத்தகைய நிலையிலும் தெடர்ந்து பேணுவது ஈமானிய மனிதர்களின் பண்பாகும். நல்லுறவு பேணுவதற்கு எந்த ஜாதியும் இல்லை. எந்த மதமும் இல்லை. இறைதூதர் மரணிக்கும் போது வயிற்றுப் பசிக்காக இரவல் வாங்கியதும் ஒரு யூதனிடமே.

எனவே எம்மை சுற்றியுள்ள மனிதர்களுடன் நல்ல முறையில் பழகுவோம். முன்மாதிரியாக நடப்போம். எமது நடை, உடை, பாவனை, உபசாரம் இன்முகம் அனைத்துமே இஸ்லாத்தின் தூதாக மாறும். கெடுபிடிகள் உள்ள காலத்தில் எமது நன்னடத்தையை விதையாய் விதைப்போம். நாளை மறுமையில் அது மரமாகி கனிதரும் நிச்சயம்.

அஷ் ஷேக் M. F. மொஹமட்
பிரதம நிறைவேற்று அதிகாரி, ஸலாமா சொஸைட்டி

# ஸலாமா தின நிகழ்வுகள் – 2019

**சமயத்துடன் ஏனைய அறிவுகளையும் சேர்த்து வழங்குவது ஸலாமாவின் சிறப்பம்சமாகும்**

**– முன்னாள் ஆளுநர் ஹிஸ்புல்லாஹ்**

எங்களது குழந்தைகளுக்கு வெறுமனே சமயத்தை மாத்திரம் படித்துக் கொடுக்காமல் சமய அறிவுடன் ஏனைய அறிவுகளையும் சேர்த்து வழங்குவது தான் இன்றுள்ள முக்கியமான பணி. அவ்வாறானதொரு பணியை ஸலாமா நிறுவனம் இந்தப் பிராந்தியத்திலே முன்னெடுப்பது தொடர்பில் நாங்கள் சந்தோஷமடைகின்றோம் என கிழக்கு மாகாண முன்னாள் ஆளுநர் கலாநிதி எம்.எல்.ஏ.எம். ஹிஸ்புல்லாஹ் தெரிவித்தார்.











காத்தான்குடி ஹிஸ்புல்லாஹ் அரங்கில் 15-02-2019 ந் திகதி நடைபெற்ற தேசிய ஸலாமா தின நிகழ்வில் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

தொடர்ந்தும் அவர் உரையாற்றுகையில், எங்களுடைய வேலைப்பளு, வியாபாரம், தொழில் எனப் பல்வேறுபட்ட காரணங்களினால் எங்களுடைய பிள்ளைகள் மீதான எங்களுடைய பொறுப்பிலிருந்து நாங்கள் தவறிவிடுகின்றோம். இது தான் எமது இளைஞர் சமுதாயம் தடம் மாறிச் செல்வதற்குக் காரணமாகிறது. அவ்வாறானதொரு வேளையில் இப்படியான

**ஸலாமா தின நிகழ்வுகள் 2019 ...**

நல்லதொரு தலைப்பில் தேசிய அளவில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள இந்த நிகழ்வினையிட்டு நான் மகிழ்ச்சி அடைகிறேன். குறிப்பாக கல்வி வளர்ச்சியில் ஆர்வத்தை ஏற்படுத்தி, விழிப்புணர்வையூட்டி, அதனோடு மார்க்கத்தையும் இணைத்து சமூக சிந்தனையோடு கல்வியைத் தொடர்புபடுத்துகின்ற இந்தச் செயற்பாடு இன்றைய சமூகத்துக்கு மிகப் பொருத்தமான செயற்பாடாகும். ஸலாமாவின் இந்தச் செயற்பாடுகளுக்குத் தேவையான ஒத்துழைப்பினை வழங்க நான் எப்பொழுதும் தயாராக இருக்கிறேன் எனத் தெரிவித்தார்.

மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபரும் மாவட்டச் செயலாளருமான எம். உதய குமார் உரையாற்றுகையில், ஒரு அமைப்பு தன்னுடைய சமூகம் சார்ந்ததாக, பிரதேசம் சார்ந்ததாக, நாடு சார்ந்ததாக, முழு மனித சமுதாயத்தினதும் விழுமியங்களைப் பாதுகாக்கின்ற அமைப்பாகச் செயற்படுகின்ற பொழுது, அது மிகச் சிறப்பான அடைவுகளை தனது சமூகத்துக்கும், பிரதேசத்துக்கும், நாட்டுக்கும் வழங்க முடியும். இந்த அடிப்படையில் ஸலாமாவும் ஸீரா அமைப்பும் செய்து வருகின்ற பணியை நான் வெகுவாகப் பாராட்டுகின்றேன். இந்த முறை தேசிய ஸலாமா தினத்தை எங்களது பிரதேசத்தில் நடத்துவதையிட்டு நான் சந்தோஷமடைகின்றேன் என்று குறிப்பிட்டார்.

ஆயிரக்கணக்கான மக்கள் திரண்டிருந்த இந்நிகழ்வில், ஸலாமாவின் தலைவர் அஷ்ஷெய்க் ஆஸாத் அப்துல் முஈத், முன்னாள் பொதுச் செயலாளர் அஷ்ஷெய்க் ரயீஸுல் இஸ்லாம், காத்தான்குடி பிரதேச செயலாளர் உதய ஸ்ரீதர், காத்தான்குடி நகரபிதா எஸ்.எச்.எம். அஸ்பர், நிந்தவூர் பிரதேச செயலாளர் அன்ஸார் (நளீமி) உட்பட பலரும் கலந்து சிறப்பித்தனர்.

காத்தான்குடி ஸீரா அமைப்பின் எம்.எம்.எம். பைசலின் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில், ஸலாமா தின தொனிப்பொருளான “நமது பிள்ளை நமது பொறுப்பு” எனும் தலைப்பில் அஷ்ஷெய்க் அனஸ் முஹம்மத் உரை நிகழ்த்தினார்.

# கிறிஸ்தவ அருட்தந்தையுடனான சந்திப்பு

**கிறிஸ்தவ தேவாலயங்கள் கிறிஸ்தவ மக்களை நோக்கி அமைதியையும் நிதானத்தையும் பேணுவதன் அவசியத்தை வலியுறுத்திக் கொண்டிருக்கிறது.**

**– மதிப்புக்குரிய அருட்தந்தை ஜோய் தெரிவிப்பு**

கடந்த 21-04-2019ம் திகதி இடம்பெற்ற குண்டுவெடிப்பு சம்பவங்களால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு அனுதாபம் தெரிவிக்கும் நோக்கில் ஸலாமாவின் தலைமை 22-04-2019ம் திகதி கொழும்பு 12 பண்டாரநாயக்க மாவத்தை புனித சென் செபஸ்தியன் கிறிஸ்தவ தேவாலயத்திற்கு விஜயம் செய்தனர்.




அத்தேவாலயத்தின் அருட்தந்தை மதிப்புக்குரிய ஜோய் அவர்களையும் அதன் நிர்வாக சபை அங்கத்தவர்களையும் சந்தித்து நடந்த நிகழ்வுகளுக்கான எமது ஆழ்ந்த கவலைகளைத் தெரிவித்தோம். நாட்டின் அமைதியையும் ஒற்றுமையையும் பேணுவதில் நாம் இணைந்து செயற்படுவதன் அவசியத்தை இரு தரப்பும் ஞாபகப்படுத்திக் கொண்டது.



இத்துயர சம்பவத்தைத் தொடர்ந்து கிறிஸ்தவ தேவாலயங்கள் கிறிஸ்தவ மக்களை நோக்கி அமைதியையும் நிதானத்தையும் பேணுவதன் அவசியத்தை வலியுறுத்திக் கொண்டிருப்பதாக மதிப்புக்குரிய அருட்தந்தை ஜோய் குறிப்பிட்டமை பாராட்டுக்குரியது.

# Salamah Talks நிகழ்ச்சித் தொடர்

Salamah Talks நிகழ்ச்சிகள் தேர்தல் காலத்தில் பொதுமக்களுக்குத் தேவையான விழிப்புணர்வை வழங்கும் நோக்கில் ஒரு தொடராக வடிவமைக்கப்பட்டு வெற்றிகரமாக நடாத்தப்பட்டன. இந்நிகழ்ச்சிகள் பல்வேறு தொணிப்பொருட்களில் ஸலாமா கேட்போர் கூடத்தில் இடம் பெற்றன. இவற்றில் பிரதம பேச்சாளர்களாக மூத்த ஊடகவியலாளர்கள், சிவில் சமூக செயற்பாட்டாளர்கள், சட்டத்தரணிகள் போன்ற துறைசார் நிபுணர்கள் கலந்து கொண்டு தேவையான தெளிவுகளை வழங்கினர். நிகழ்வுகளுக்கு ஸலாமாவின் தலைவர் அஷ் ஷேய்க் ஆஸாத் அப்துல் முஊத் அவர்கள் தலைமை தாங்கினார். சகோதரர் பாஹிம் பைரூஸ் நிகழ்ச்சிகளைத் தொகுத்து வழங்கினார்.

















ஒக்டோபர் மாதத்தில் வாராந்தம் இந்நிகழ்வுகள் ஒழுங்குபடுத்தப்பட்டதோடு அவை பேஸ்புக் ஊடாக நேரலையாகவும் ஒளி/ஒலி பரப்பப்பட்டன. இந்நிகழ்ச்சிகள் பின்வரும் தலைப்புக்களில் நடைபெற்றன:

- ❖ தேர்தல்களின் போது சிவில் சமூகம் - (சிங்களத்தில்)
  ஊடகவியலாளர் விக்டர் ஐவன்
- ❖ வாக்களிப்பும் அடிப்படை உரிமையும்
  சட்டத்தரணி எம் ஏ. எம். ஹகீம்
- ❖ ஜனாதிபதி தேர்தலில் எவ்வாறு வாக்களிக்க வேண்டும்:
  சட்டத்தரணி வை. எல். எஸ். ஹமீத்
- ❖ இலங்கைத் தேர்தல் முறையும் கண்காணிப்பும்
  CaFFE பணிப்பாளர் மனாஸ் மகீன்
- ❖ ஜனாதிபதித் தேர்தல் 2019
  முன்னாள் தேர்தல் ஆணையாளர் எம். எம். முஹம்மத்
- ❖ Climate Change - மனித இனம் எதிர்கொள்ளும் அச்சுறுத்தல்
  M.N. Mohammed (I.S.A -Science, Writer)









## Dialogue Forum:

## Character is more important than Intelligence

## ஆசிரியர்களுக்கான உரையாடல் மன்றம்




Salamah Dialogue Forum : "Character is more Important than Intelligence" – Special Dialogue Forum on School Education என்ற தலைப்பில் நிகழ்ச்சியொன்று கடந்த 06-11-2019ம் திகதி ஸலாமா கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது. இதில் வளவாளராக முன்னாள் பிரதிக் கல்விப் பணிப்பாளரும் எழுத்தாளருமான Mr. T.M. Premawardana அவர்கள் கலந்து கொண்டார்கள். நிகழ்வுக்கு ஸலாமாவின் தலைவர் அஷ்ஷேய்க் ஆஸாத் அப்துல் முஊத் அவர்கள் தலைமை தாங்கினார். சகோதரர் பாஹிம் பைரூஸ் நிகழ்ச்சிகளைத் தொகுத்து வழங்கினார். கொழும்பிலுள்ள முஸ்லிம் பாடசாலைகள் சிலவற்றின் அதிபர்களும், ஆசிரியர்களும் கலந்து கொண்டனர்.



# ஸலாமா வருடாந்த பொதுக் கூட்டம் 2019

**மனித நேயம் தலைத்தோங்க ஒன்றுபட்டு உழைப்போம்.**

– ஸலாமாவின் தலைவர்
அஷ்ஷெய்க் ஆஸாத் அப்துல் முஈத்

நாட்டின் தேசியப் பாதுகாப்பை பலப்படுத்தும் விவகாரத்தில் ஸலாமாவின் ஒத்துழைப்பும் பங்களிப்பும் முதன்மையானது என்பதில் இருகருத்துக்கு இடமில்லை என்பதை நீங்கள் அறிவீர்கள். நீங்கள் ஒவ்வொரும் சமூகத்தில் காத்திரமான ஒரு பணியை செய்ய வேண்டும், தீவிரமில்லாத, நடுநிலையான சமூகத்தை உருவாக்க அயராது உழைக்க வேண்டும் என ஸலாமா சொஸைட்டியின் முதலாவது வருடாந்த பொதுக்



கூட்டத்தில் அதன் தலைவர் அஷ்ஷெய்க் ஆஸாத் அப்துல் முஈத் அவர்கள் கேட்டுக் கொண்டார்.

கடந்த 09.11.2019ம் திகதி ஸலாமா சொஸைட்டியின் வருடாந்த பொதுக் கூட்டம் கொழும்பு அல்-ஹிதாயா கல்லூரி கேட்போர் கூடத்தில் நடைபெற்றது. சுமார் 150 அங்கத்தவர்கள் கலந்து கொண்ட இந்நிகழ்வில் கடந்த ஆண்டில் நாட்டு நலனையும் சமூக நலனையும் இலக்காகக் கொண்டு சாதித்த செயற்பாடுகள், அர்ப்பணங்கள், முயற்சிகள், சாதனைகளின் போது முகம் கொடுத்த சவால்கள் தொடர்பான அறிக்கைகள் முன்வைக்கப்பட்டதுடன், எதிர்காலத்தில் முன்னெடுக்கப்பட வேண்டிய செயற்திட்டங்கள் தொடர்பான கலந்துரையாடலும் இடம்பெற்றது.

ஸலாமா சொஸைட்டியின் தலைவர் மேலும்




தனதுரையில், ஒரு நாடு பாதுகாப்பாக இருக்கும்போதுதான் அது வளம் பெறும். அபிவிருத்தியடையும். குடிமக்கள் நிம்மதியாக வாழும் சூழல் பிறக்கும். நாட்டின் நற்பெயர் வலுப்பெறும். ஆனால் ஒரு தேசத்தின் பாதுகாப்பிற்கு பாதிப்பு ஏற்படும்போது மேற்சொன்ன அனைத்தும் பாதிக்கப்படும். இதனால்தான் இஸ்லாம் தேசிய பாதுகாப்பிற்கு அதிவிஷேட முக்கியத்துவம் கொடுத்துள்ளதாக அல்குர்ஆனின் வசனங்களை மேற்கோள் காட்டிக் குறிப்பிட்டார்.

மேலும் ஸலாமா சொஸைட்டி சமூகத்திற்கும் நாட்டிற்கும் செய்த பணிகளைப் பற்றிக் குறிப்பிட்டார். குறிப்பாக, ஒவ்வொரு அங்கத்தவரும் தமது பிரதேசங்களில் சமூகப் பணியைச் செய்யக்கூடிய நல்ல பிரஜைகளை உருவாக்கினோம். மற்றும் இஸ்லாமிய விழுமியங்களை பேணி வாழும் குடும்பங்களை நிர்மாணிப்பதில் நாம் கவனம் செலுத்தினோம். இஸ்லாத்தின் நடுநிலையான சிந்தனையை சமூகத்திற்குக் கொண்டு சென்றோம். சகவாழ்வு வேலைத்திட்டத்தில் ஒரு காத்திரமான பங்களிப்பை தேசிய ரீதியில் நாம் செய்தோம்.

சமூகத்தின் ஏனைய நிறுவனங்களுடனும் தனிநபர்களுடனும் இணைந்து செயற்பட்டோம். நற்பணிகளில் ஒத்துழைப்பு வழங்கினோம். எமது செயற்பாடுகள் மூலமாக தீவிர சிந்தனைகள், பிழையான நடத்தைகள் போன்றவற்றிலிருந்து



ஆயிரக்கணக்கான இளைஞர்கள் காப்பாற்றப்பட்டனர். எனவே, இப்பணிகளைச் செய்வதற்காக உழைத்த அனைவருக்கும் நன்றி தெரிவிப்பதுடன், சமூகத்திற்கும் நாட்டிற்கும் செய்யப்பட வேண்டிய பணிகள் அதிகம் என்பதால் அனைவரும் தொடர்ந்தும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்.

அத்துடன் எதிர்வரும் 2019 – 2023 வரையான நான்கு ஆண்டுகளுக்கான புதிய நிர்வாகத் தெரிவும் இடம்பெற்றது. ஸலாமாவின் புதிய தலைவராக மீண்டும் அஷ்ஷெய்க் ஆஸாத் அப்துல் முஈத் அவர்கள் தெரிவு செய்யப்பட்டதுடன், உபதலைவர்களாக அஷ்ஷெய்க் ரயீஸுல் இஸ்லாம், எஸ். நிஹ்ஸாஸ் ஆசிரியர் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர். பொதுச் செயலாளராக எம்.எப்.எம். பாஹிம் அவர்களும் பொருளாளராக எம். நியாஸ் மொஹிதீன் அவர்களும் தெரிவு செய்யப்பட்டனர். மேற்குறிப்பிடப்பட்ட பதவிதாங்குனர்களுடன் நிர்வாக சபை அங்கத்தவர்களாக அஷ்ஷெய்க் ஏ.டபிள்யு.எம். பாஸிர், அஷ்ஷெய்க் எம்.எப். முஹம்மத், ஆர்.எம். நயீம், எம்.எம்.எம். பாஸில் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர்.

கௌரவ தலைவர் அவர்கள் தனது உரையில், மனிதநேயம் என்பது 2020ம் ஆண்டின் ஸலாமா தினத் தொனிப்பொருளாக தெரிவு செய்துள்ளதாக சபையில் பிரகடனம் செய்தார்கள். இத்தேசத்தில் மனித நேயம் தலைத்தோங்க ஸலாமாவின் அங்கத்தவர்கள் அனைவரும் ஒன்றுபட்டு உழைப்பதோடு, இலங்கை வாழ் அனைத்து சமூகத்தினரையும் இதற்காக இணைத்து செயற்படுமாறு தலைவர் அவர்கள் கேட்டுக் கொண்டார்.

## ஸலாமாவின் குடும்ப வழிகாட்டல் நிகழ்ச்சி

ஸலாமா நடாத்திய NOBLE FAMILY நிகழ்ச்சித் தொடரின் முதலாவது நிகழ்வு நவம்பர் மாதம் 30ஆம் திகதி ஸலாமா கேட்போர் கூடத்தில் இடம் பெற்றது.

பிள்ளைகளின் பாடசாலை விடுமுறையை எவ்வாறு சிறந்த முறையில் திட்டமிடலாம் என்ற தொணிப்பொருளில் இடம்பெற்ற இந்த நிகழ்ச்சியை உளவளத்துணை ஆலோசகர் மனூஸ் அபூபக்கர் நடாத்தி வைத்தார்.








# ஸலாமாவின் 2020 க்கான கருப்பொருள்

# மனித நேயம்